**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**
**அ.வ.எண்.514/2021**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03–ம் நாள் செவ்வாய்கிழமை **பி.வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேணுகோபாலு | தொழில் | விவசாயம் |
| த/பெ | சேனாபதிகவுண்டர் | கிராமம் | செந்துார்நிலையம் |
| வயது | 70 | தாலுகா | தாராபுரம் |
| | | மாவட்டம் | தாராபுரம் |

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. வா.சா.ஆ–1ல் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். 2வது கையெழுத்து மனைவியுடையது மூன்று மற்றும் நான்கு பிரதிவாதிகளின் கையெழுத்து மூன்றாவது மற்றும் நான்காவதாக உள்ளதாகும். வா.சா.ஆ.1ல் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்திலும் எங்கள் நால்வரின் கையெழுத்தும் உள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடைய மகன் எம்.பி.ஏ முடித்துள்ளார். அவர் இந்த வழக்கில் 3–ம் பிரதிவாதியாவார். என்னுடைய மகள் 4–ம் பிரதிவாதி எம்பிபிஎஸ் படித்துள்ளார். வா.சா.ஆ.1ல் சாட்சி கையெழுத்து போட்டுள்ள தேவி என்பவர் என்னுடைய மகளின் வகுப்பு தோழி என்று சொன்னால் சரியல்ல. அவர் என்னுடைய மகளுக்கு தெரிந்தவர். அவர் என்னுடைய மகள் சொல்லித்தான் வா.சா.ஆ.1ல் சாட்சி கையெழுத்து போட்டார் என்று சொன்னால் இருக்கலாம். 2–வது சாட்சி கையெழுத்து செய்துள்ள கே.பி.சோமசுந்தரம் என்பவர் எனக்கும் வாதிக்கும் தாவா சொத்து தொடர்பாக இடைத்தரகராக செயல்பட்டார் என்று சொன்னால் சரியல்ல வாதியுடன் விற்பனை சமயத்தில் உடன் வந்தார். தாவா ஒப்பந்தத்திற்கு முன்பு வாதி தாவா சொத்தை பார்வையிட வந்தார் என்று சொன்னால் வந்திருக்கலாம் எனக்கு தெரியாது.

2. தாவா ஒப்பந்தத்திற்கு முன்பு தாவா சொத்து அந்த சமயத்தில் 10 அடி பள்ளமாக இருந்தது என்று சொன்னால் ஏற்கனவே பள்ளமாக தான் இருந்தது. வாதி அவ்வாறு பார்வையிட்டபோது தாவா சொத்து தண்ணீர் தேங்கியும் புதராகவும் இருந்தது என்று சொன்னால் சரியல்ல சமமாகத்தான் இருந்தது. தாவா ஒப்பந்தமான வா.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள காசோலையின்படி எனக்கும் பிரதிவாதிகளுக்கும் ரூபாய் ஒரு கோடி மறுபயனாக கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 ரசீதில் உள்ள கையெழுத்து என்னுடையதும் மற்ற பிரதிவாதிகளுடையதும் என்று சொன்னால் சரிதான். வாதிகளிடமிருந்து கடந்த 18.09.2019 ஆம் வருடம் ரூபாய் 70 லட்சம் வாங்கியதற்கான ரசீது தான் வா.சா.ஆ.2 என்று சொன்னால் சரிதான். அந்த வகையில் வாதி என்னிடம் ரூபாய் ஒரு கோடியே 70 லட்சம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். தாவா ஒப்பந்தத்திற்காக வாதி என்னிடம் ரூபாய் ஒரு கோடியே 70 லட்சம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல மேற்படி தொகையை நான் வாதியிடமிருந்து கடனாக வாங்கினேன். நான் வாதி கொடுத்த அறிவிப்புக்கு கொடுத்த பதில் அறிவிப்பில் மேற்படித்தொகை என்னால் வாதியிடமிருந்து கடனாகத்தான் பெறப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படித் தொகை வாதியிடமிருந்து கடனாகத்தான் பெறப்பட்டது என்று நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சங்கதியை நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. வாதியிடமிருந்து மேற்படி ஒரு கோடியே 70 லட்சம் ரூபாய் கடனாக பெற்றதாக நான் கூறுவது பொய் என்பதால் தான் அதை நான் ஏற்கனவே கொடுத்த பதில் அறிவிப்பிலும், எதிர் வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பதில் அறிவிப்பில் மேற்படி தொகை ஒப்பந்தத்திற்காக கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டுவிட்டு தற்போது மேற்படி சங்கதியை மறுத்து

சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ல் உள்ள கையெழுத்து என்னுடைய தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 செந்தில்குமார் என்பவருக்கு நான் நிறைவேற்றிக் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி செந்தில்குமார் வாதியிடம் வேலை செய்பவர் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. இந்த வழக்கில் வாதி தரப்பு மூன்றாவது சாட்சியாக விசாரிக்கப்பட்ட செந்தில்குமாரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி செந்தில்குமாரை நான் பார்த்து இருக்கிறேன் என்று சொன்னால் வாதியோடு வந்திருக்கலாம் எனக்கு தெரியாது.

4. தாவா ஒப்பந்தத்திற்கு பிறகு தாவா சொத்தில் உள்ள பள்ளத்தை நிரப்புவதற்காக மண் எடுப்பதற்காக நான் வாதிக்கு இடம் பார்த்து கொடுத்தேன் என்று சொன்னால் நான் பார்த்துக் கொடுக்கவில்லை அவர்கள் பார்த்திருக்கலாம். வா.சா.ஆ.3 தாவா ஒப்பந்த சொத்தில் உள்ள பள்ளத்தை நிரப்புவதற்காக மேற்படி சொத்துக்கு அருகில் உள்ள நிலத்திலிருந்து மண்ணை எடுத்து நிரப்புவதற்காக வாதியின் பணியாளரான மேற்படி செந்தில்குமாருக்கு நான் கொடுத்த சம்மத கடிதம் என்றால் சரிதான். தாவா சொத்தில் இருந்து ஏழு கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் ஒரு இடம் மேற்படி மண் எடுப்பதற்காக பின்னிட்டு மேற்படி செந்தில்குமாரால் கிரையம் பெறப்பட்டது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. தாவா ஒப்பந்தத்திற்கு பிறகு வாதி தாவா ஒப்பந்த சொத்தில் உள்ள பள்ளத்தை மண் போட்டு நிரப்பினார் என்று சொன்னால் இல்லை. அவ்வாறு மண் போட்டு நிரப்பியது உண்மை என்றாலும் அதை ஒப்புக் கொண்டால் என்னுடைய வழக்குக்கு பாதகமாக இருக்கும் என்பதால் அதை மறுத்து சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா ஒப்பந்தத்திற்கு பிறகு தாவா ஒப்பந்த சொத்தில் இருந்த பள்ளங்களை மண்ணிட்டு நிரப்பியும் வேலி அமைத்தும் வாதி பணி செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

5. தாவா ஒப்பந்த காலத்தில் தாவா சொத்து வங்கியில் அடமானம் வைக்கப்பட்டு இருந்தது என்றால் சரிதான். மேற்படி அடமானம் வைக்கப்பட்டிருந்த சங்கதியை நான் வாதியிடம் மறைத்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா ஒப்பந்த சொத்து பொறுத்து சட்ட கருத்துறை பெற்று தருவதாக நான் ஒப்பந்த காலத்தில் ஒப்புக்கொண்டேன் என்று சொன்னால் ஒப்புக்கொண்டு இருக்கலாம். நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சர்வேயரின் பெயர் என்ன என்றால் சர்வேயர் வரவில்லை. நான் மற்ற பிரதிவாதிகளுக்கும் சேர்த்து சாட்சியமளிக்கிறேன். குறித்த நேரம் ஒப்பந்தத்தில் முக்கியமான காரணி என்று நான் முதலில் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சூழ்நிலையில் ஒப்பந்தத்தில் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பூமியை அரசு நில அளவையர் மூலம் அளந்து கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தத்தில் நான் ஒப்புக்கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு ஒப்புக்கொண்டுவிட்டு தற்போது அதை ஒப்புக் கொண்டால் என்னுடைய வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் அதை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஒப்பந்த காலத்தில் தாவா சொத்தில் இருந்த வில்லங்கங்களை மறைத்து நான் ஒப்பந்தம் செய்தேன் என்றாலும் பின்னிட்டு மேற்படி வில்லங்கம் குறித்து வாதிக்கு தெரிய வரும்போது அதை நீக்கி தரச் சொல்லி அவர் என்னிடம் கேட்டு நான் அதை செய்யாததால் தான் குறித்த காலத்தில் வாதியால் தாவா சொத்தை கிரயம் செய்ய முடியாமல் போய்விட்டது என்று சொன்னால் சரியல்ல.

6. வாதிக்கு பல சொத்துக்கள் உள்ளன என்று சொன்னால் இருக்கலாம். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஒன்பதாவது பத்தியில் பொய்யான விபரங்களை வாதியை அவதூறு செய்யும் நோக்கத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி 30 ஆண்டுகளுக்கு மேலாக ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. தாவா ஒப்பந்தத்தில் ஒப்புக்கொண்டவாறு தாவா சொத்தை

அரசு அளவேயரை வைத்து அளந்து கொடுக்க வேண்டிய கடமையும், தாவா சொத்தில் உள்ள வில்லங்கத்தை சரி செய்து கொடுக்காதால்தான் வாதியால் உரிய நேரத்தில் மேற்படி கிரயத்தை செய்ய முடியாமல் போய்விட்டது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு மேற்படி குறைபாடுகளை நான் சரி செய்து கொடுக்காத சூழ்நிலையில் வாதி ஒப்பந்தத்தை நிறைவேற்ற தயாராகவும் விருப்ப நிலையிலும் இல்லை என்று நான் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் மொத்தம் 12.13 ஏக்கர் நிலம் பாத்தியப்பட்டது என்று சொன்னால் அதற்கு மேல் அதிகமாக உள்ளது. அதில் ஒரு ஏக்கர் நீங்க 11.13 ஏக்கர் நிலம் தான் ஒப்பந்தத்திற்கு பேசப்பட்டது என்று சொன்னால் சரியல்ல அதிகமாக போடப்பட்டது.

7. ஒப்பந்தத்தில் ஒரு ஏக்கர் ஒரு கோடியே 45 லட்சத்திற்கு பேசப்பட்டது என்று சொன்னால் சரிதான். ஒப்பந்தத்தின் மொத்த தொகையாக 16 கோடியே 13 லட்சத்து 85 ஆயிரம் என்று குறிப்பிடப்பட்டது என்றால் சரிதான். தாவா கிரைய ஒப்பந்தத்தின்படி தாவா சொத்தை வாதிக்கு வில்லங்கசுத்தியாக கிரயம் கொடுக்க நானும் மற்ற பிரதிவாதிகளும் கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு கிரையம் கொடுப்பதிலிருந்து தவிர்ப்பதற்காக நான் பொய்யாக வழக்காடி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு பாவா சொத்தை கிரயம் கொடுப்பதை தவிர்ப்பதற்காக நான் பொய்யான விவரங்களை எதிர் வழக்குரையிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்தத்தில் கண்டுள்ளவாறு தாவா கிரேய தொகையை செலுத்துவதற்கு வாதி எப்போதும் விருப்பத்துடனும் தயார் நிலையிலும் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. தாவா வாதி கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நானும் மற்ற பிரதிவாதிகளும் வாதிக்கு தாவா சொத்தை கிரயம் கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா ஒப்பந்தத்தில் கண்டவாறு சட்டக்கருத்துரையை நான் பெற்றுக்கொடுக்கவில்லை என்று சொன்னால் நான் பூமியை விலை பேசவில்லை. பூமியை விலைபேசவில்லை என்று தற்போது வழக்குக்காக

பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:— இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.03 20:20:02 +0530

3—ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.